www.Padasalai.Net www.CBSEtips.in

V9T

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

வகுப்பு 9

காலம்: 3.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 100

பகுதி - 1

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 15×1=15

1) தமிழ்விடுதூது ................ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2) நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

3) பொருந்தாத இணை எது?
அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
இ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம் ஈ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு

4) பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் தொடர் எது?
அ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.
ஆ) பட்டிமன்றம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது.
இ) புறப்பொருள் மணமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.
ஈ) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன.

5) பின்வரும் தொடர்களைப் படித்து 'நான் யார்'? எனக் கண்டுபிடிக்க.
"அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்
எல்லாக் கோள்களிலும் ஏற்றப்படுவேன்
இளையவர் கூட்டம் ஏந்தி நடப்பர்".
அ) தமிழ் ஆ) இணையம் இ) ஏவுகணை ஈ) கணினி

6) தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணாக்கர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசிய திறனறித் தேர்வு
ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
இ) தேசிய திறனறி & கல்வி ஊக்கத் தொகைத் தேர்வு
ஈ) மூன்றும் சரி

7) திருநாதர் குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை .............
அ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள் ஆ) விலங்கு உருவங்கள்
இ) தீர்த்தங்காரர் உருவங்கள் ஈ) தெய்வ உருவங்கள்

8) பல்லவர் காலச் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்று .............
அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
இ) தாடிக்கொம்பு ஈ) திரிபுவன வீரேசுவரம்

9) சரியான கூற்றைத் தெரிவு செய்க:
1. 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை.
2. வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்.
3. வீட்டிற்கு ஒரு புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு.
அ) மூன்றும் சரி ஆ) அ, இ - சரி; ஆ - தவறு
இ) ஆ, இ - சரி; அ - தவறு ஈ) மூன்றும் தவறு

10) இந்திய தேசிய இராணுவத்தை ............. இன் தலைமையில் ............. உருவாக்கினர்.
அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் ஆ) மோகன்சிங், ஜப்பானியர்
இ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்

11) சொல்லும் - பொருளும் பொருந்தியுள்ளது எது?
அ) வருக்கை - இருக்கை ஆ) புள் - தாவரம்
இ) அள்ளல் - சோறு ஈ) முடிவு - தொடக்கம்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



ஆ) பாடலைப் படித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக:

காய் மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங்கனி சிதறி வாழைப்பழங்கள் சிந்தும்
ஏமாங்கதம் என்று இசையால் திசை போயது உண்டே!

12) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்

அ) தமிழ்விடுதூது ஆ) பெரியபுராணம்
இ) சீவக சிந்தாமணி ஈ) மணிமேகலை

13) மேற்கண்ட பாடலில் ................ நாட்டின் வளம் கூறப்பட்டுள்ளது.

அ) குடநாடு ஆ) ஏமாங்கத நாடு இ) அங்கத நாடு ஈ) கொங்கு நாடு

14) 'வருக்கை' என்பதன் பொருள் ................

அ) பலாப்பழம் ஆ) தேங்காய் இ) வாழைப்பழம் ஈ) மாம்பழம்

15) தேமாங்கனி - இலக்கணக்குறிப்பு

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

## பகுதி - 2

**அ) எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க: 4×2=8**

**21வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16) 'டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது?

17) உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

18) 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' - குறிப்புத் தருக.

19) தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் எது?

20) கருக்கொண்ட பச்சைப் பாம்பு எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?

21) **அடிபிறழாமல் எழுதுக:**

'சுழன்றும்' எனத் தொடங்கும் திருக்குறள்.

**ஆ) குறுகிய விடையளி: (எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்) 5×2=10**

22) இடிகுரல், பெருங்கடல் - **இலக்கணக்குறிப்புத் தருக.**

23) வீணையோடு வந்தாள், கிளியே பேசு - **தொடரின் வகையைச் சுட்டுக.**

24) பண்பாகு பெயர் - விளக்குக.

25) **மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க:**

அ) எட்டாக்கனி ஆ) கிணற்றுத் தவளை

26) **சரியா, தவறா - எனக் கூறுக:**

அ) பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது. (சரி / தவறு)

ஆ) ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகாது. (சரி / தவறு)

27) **அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக:**

அ) உலகில் மூவாயிரம் மொழிகள் ................ (பேசு)

ஆ) குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ................ (செல்)

28) **கலைச்சொல் தருக:**

அ) Hero stone ஆ) Volunteer

## பகுதி - 3

**அ) சிறுவினா: (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி) 2×3=6**

29) மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

30) சோழர் கால குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

V9T



31) **பின்வரும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:**

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள், ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர்பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர்பெற்றுள்ளன. அத்துடன், ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

கடுமையாக உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுத்துறையில் காங்கேயம் மாடுகளின் உருவம் பொறித்த கி.மு முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**விடையளி:**

1. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.

   அ) கர்நாடகம் ஆ) கேரளா இ) இலங்கை ஈ) ஆந்திரா

2. பிரித்து எழுதுக: கண்டெடுக்கப்பட்டுள்ளன

   அ) கண்டு+எடுக்கப்பட்டு+உள்ளன ஆ) கண்டெடுக்க+பட்டு+உள்ளன

   இ) கண்டு+எடுக்கப்+பட்டுள்ளன ஈ) கண்+டெடுக்க+பட்டு+உள்ளன

3. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. இது எவ்வகைத் தொடர்?

   அ) வினாத்தொடர் ஆ) உணர்ச்சித்தொடர்

   இ) கட்டளைத்தொடர் ஈ) செய்தித்தொடர்

**ஆ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க: 2×3=6**

**34வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32) அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

33) ஆண்டாளின் கனவு காட்சிகளை எழுதுக.

34) **அடிபிறழாமல் எழுதுக:**

அ) "பூவாது காய்க்கும் ............" எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் பாடல்.

**இ) சிறுவினா: (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி) 2×3=6**

35) கைபிடி, கைப்பிடி சொற்களின் பொருள் வேறுபாடுகளையும், அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

36) பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

37) தன்வினை, பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

## பகுதி - 4

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 5×5=25**

38) **விடையளி:**

அ) **தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க:**

சித்திரமும் கைப்பழக்கம் ..................

ஆ) **பொருள் எழுதித் தொடர் அமைக்க:** 'குழவி'

இ) **அலை, அழை - பொருள் வேறுபாடு தருக.**

ஈ) **இடைச்சொல்லைக் கொண்டு தொடர்களை இணைக்க:**

பெரும் மழை பெய்தது. வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

உ) **அகராதியில் காண்க:**

39) அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

40) அ) **கவிதை எழுதுக: தலைப்பு** மூடநம்பிக்கை

**(அல்லது)**

ஆ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41) அ) **மொழிபெயர்க்க:**

Hitting the bottles with the spoon makes them vibrate and produce a sound. The more the bottle vibrates, higher the note will be. The more water in a bottle, the less it vibrates. So less water means higher notes.

**(அல்லது)**

ஆ) உன்னை மகிழச் செய்த பணிகள் 5 எழுதுக.

42) **நயம் பாராட்டுக:**

பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர்சி லிர்க்கும்
சிங்கமே! வான வீதி திகுதிகு எனஎ ரிக்கும்
மங்காத தணற்பி ழம்பே! மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வானத் தகளியிற் பெருவி ளக்கே!
கடலிலே கோடி கோடிக் கதிர்க்கைகள் ஊன்று கின்றாய்
நெடுவானில் கோடி கோடி நிறைசுடர்க் கைகள் நீட்டி
இடைப்படு மலையோ காடோ இல்லமோ பொய்கை ஆறோ
அடங்கநின் ஒளிஅ ளாவ அமைந்தனை! பரிதி வாழி!

\- பாரதிதாசன்.

## பகுதி - 5

***விரிவான விடையளி:*** **3×8=24**

43) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

44) இந்திய தேசிய ராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரை வழி நிறுவுக.

**(அல்லது)**

ஏறு தழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

**(அல்லது)**

45) **கட்டுரை வடிவில் விடை தருக:**

இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

**(அல்லது)**

'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.